# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 04 மலர் 38 ஆகஸ்ட் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app





எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# கையறு நிலை



**தாயகன்**

சிறிலங்கா சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவுக்கு வந்துவிட்டதாக மார்பு தட்டப்பட்டுக் கொண்டிருக்கையில், வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் சரித்திரபூர்வமாக வாழ்ந்து வருகின்ற தமிழ்த் தேசிய மக்கள் இனமோ தனது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக போராடிக்கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி, சிங்கள,பௌத்த தேசியவாதத்தின் திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் தொடருகின்றமையால், தனது நிலத்தையும், பண்பாடுகளையும், கலைகளையும், வரலாற்றையும் பாதுகாப்பதற்கும் தினமும் உறங்கா நிலையில் இருக்க வேண்டிய கட்டாயமும் நீடிக்கின்றது.

இந்தப் பின்னணியில், தனிநாடு கோரி ஆயுத ரீதியிலும், சமஷ்டி கோரி அஹிம்சை ரீதியிலும் போராடிய இனம் தற்போது 'பொங்கல்' வைப்பதற்காக போராட வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

கடந்த 18ஆம் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் நிகழ்வை முன்னெடுப்பதற் காக பெரும்போராட்டத்தினை நடத்த வேண்டியிருந்தது.

குறித்த போராட்டத்தில் வெற்றி பெற்று பொங்கல் நிகழ்வு நிறைவுக்கு வந்திருந்தாலும், அது நிரந்தரமானது அல்ல. ஒவ் வொரு ஆண்டும் இதேயொ த்த நிலைமையே நீடிக்கும் அல்லது இதனை விடவும் மோசமான நிலைமையே நீடிக்கும்.

ஏனென்றால், குருந்தூர் மலை தொல்பொருளி யல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் 'குருந்து விகார' நிர்மாணிக்கப்பட்டது. அதற்கான பங்களிப்பை படைத்தரப்பே பிரதானமாக நின்று வழங்கியது. சட்டவிரோதமாக நிர்மாணம் அமைக்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அறிவித்த பின்னரும், நிர்மாணம் அகற்றப்படவில்லை. மாறாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகவே, எதிர்காலத்திலும், குறித்த நிர்மாணம் அகற்றப்படப்போவதில்லை. மாறாக, அங்கே பெருமெடுப்பில் வழிபாடுகளையும், நிகழ்வுகளையும் மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்களே நடை பெறவுள்ளன. பொங்கல் நிகழ்வு நிறைவடைந்துள்ளமையை தனது தோல்வியாக தேரர்கள் கருதுகின்ற நிலையில் அடுத்துரும் காலத்தில் அதனை ஏதோவொரு வழியில் ஈடுசெய்யவே முனைவார்கள்.

இத்தகைய சூழலில் ஒவ்வொரு ஆண் டும், பண்பாட்டு ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டிய கலாசார நிகழ்வொன்றுக்காக போராட வேண்டிய நிலைமையே தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ளது.

குருந்தூர்மலை மட்டுமல்ல, தையிட்டி திஸ்ஸ விகாரை, சுழிபுரம் பறாளய் முருகன் ஆலயம், கிளிநொச்சி சிவன் ஆலயம், கீரிமலை சிவன் ஆலயம், வவுனியா வெடுக்குநாறி ஆலயம், திருகோணமலை குச்சவெளி பெரியகுளம் உச்சிமலை பிள்ளையார் மலை, மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை என்று பட்டியல் நீண்டு செல்கின்றது.

இந்த ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்கு தற்போது வரையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்ததும் அல்லது, தேரர்கள் சூழந்ததும் உசார் வெறியர்கள் போன்று அறிக்கைகளும், சொற்பளவிலானவர்களின் பங்கேற்புடனும் போராட்டங்களும் நடைபெறுகின்றன.

ஆனால், அவையெல்லாம், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முழுமையாக தடை செய்யதாக இதுகால வரையிலும் எங்கும் பதிவுகள் இல்லை. மாறாக, திட்டமிட்டவாறு ஆக்கிரமிப்பு நடைபெற்றே வந்திருக்கின்றது.

ஆகவே ஆக்கிரமிப்பு விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புக்களும் சரி, சிவில் அமைப்புக்களும் சரி பரந்துபட்ட வகையிலான கலந்துரையாடல்களுடன் திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அவ்விதமான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படுவதாக இல்லை. மாறாக, அண்மைய காலங்களில் போராட்டங்களில் பங்கேற்பதற்கு பொதுமக்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகின்றமையால் ஒருநாள் அடையாள கடையடைப்பு என்ற வகையில் தான் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இது தமிழ் அரசியல் தரப்பின் புதிய உத்தியாகவும் உள்ளது.

அந்தக்கடையடைப்புக்களால் எவ்விதமான தாக்கமும் அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை. குறித்த கடையடைப்புக்கள் தொடர்பாக அரசாங்கம் பிரதிபலிக்கவும் இல்லை. அக்கடையடைப்புக்களை அடுத்து அரசாங்கம் கடையடைப்புச் செய்தமைக்கான காரணங்கள் தொடர்பில் கவனத்தில் எடுத்ததாகவும் இல்லை.

ஆகவே, தமிழ் அரசியல் தரப்புக்கள் தமக்கு சுலபமான அல்லது உத்தியாக கடையடைப்புக்களுக்கான அழைப்புக்களை விடுத்தாலும் அதனால் ஏற்பட்ட விளைவு 'பூச்சியமாகவே' உள்ளது. அத் துடன், தாயகத்தில் உள்ள வியாபாரிகளுக்கே இழப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன.

எனவே, இந்த விடயத்தில், தனித்தனியாக அரசியல் மதிப்பெண்களைப் பெறுவதற்கான செயற்பாடுகளை அனைத்து அரசியல் கட்சிகளும் கைவிட்டு, பொதுப்படையான செயற்றிட்டமொன்றை உடன் வகுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தச் செயற்றிட்டம் முறையாக வகுத்துக்கொள்ளப்படாத நிலைமை இன்று நேற்று அல்ல கல்லோயாத் திட்ட ஆக்கிரமிப்பிலிருந்து தொடருகின்றது. ஆகவே இனி னும் காலம் தாழ்த்தப்படுகின்றனபோது, கிழக்கில் இனப்பரம்பல் மாற்றப்பட்டுவிட்டது என்று தற்போது கதறுகின்ற நிலைமைதான் வடக்கிலும் ஏற்படும். அதற்கால காலமும் குறுகியதாக மாறிவிடும் அபாயமே உள்ளது.

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில், தமிழ் மக்களின் ஆணைபெற்றவர்கள் என்ன செய்கின்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முண்னணி ஏனையவர்களுடன் இணைந்து செயற்பட 'தீட்டு' பார்த்துக்கொண்டு உள்ளது. திருமணத்தில் மாப்பிளையாகவும், மரணச் சடங்கில் பிணமாகவும் தாமே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இறுக்கமாக உள்ளது.

இதன் விளைவால் அவர்கள் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும் போராட்டங்களில் அவர்களின் வாகனச்சாரதிகள் உள்ளடங்கலாக அதிகபட்ச எண்ணிக்கை 25ஐக் கடப்படதே மிகக் கடினமானதாக உள்ளது.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்கள் முன்னணி போராட்டம் என்பது வெறுமனே சமூக வலைத்தள பிரசாரப்பொருளாகவே இருக்கின்றது.

அந்தப்போராட்டத்தால் எவ்விதமான தாக்கங்களையும் ஏற்படுத்த முடிந்திருக்கவில்லை.

அதேநேரம், தமிழ்த் தேசியத் தரப்புக்கள் என்ற வகையறாக்களுக்குள் இருக்கின்ற ஏனைய தரப்பினரான, தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவங்களான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியன போராட்ட அரங்கிலேயே காண்பது மிகமிக அரிதான விடயமாகின்றது.

அத்தரப்புக்கள், பேச்சுக்கள் ஊடாக தீர்வை அடையலாம் என்றும் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கும், ஜனாதிபதிக்கும் கடிதங்களை எழுதுவதன் மூலமும் தமது பங்களிப்பைச் செய்வதாக விழிக்கின்றார்கள். ஆனால் அதனால் அடைந்த பயன்கள் என்னவென்று பார்த்தால் விரல்விட்டு எண்ணுவதற்கு கூட எதுவுமில்லை.

மறுபக்கத்தில், இந்த தரப்புக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்தனியாக கையாண்டு வருகின்றார். இதனால் இவர்களின் ஒருமித்த செயற்பாடு என்பது பெரும்பாலும் நாளுக்கு நாள் குறைவடைந்தே வருகின்றது.

அந்தவகையில், விக்னேஸ்வரன், சித்தார்த்தன் ஆகியோரைத் தனியாகவும், சுமந்திரன் சாணக்கியன் அணி, சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் அணி, செல்வம் அடைக்கலநாதன், சுரேன் குருசுவாமி அணி ஆகியவற்றை தனித்தனியாகவும் அவர் கையாள்கின்றார்.

இதில் கோவிந்தன் கருணாகரம், கலையரசன், வினோநோதராதலிங்கம் ஆகியோர் அவ்வப்போது ஏதேவொரு அணியில் பங்கேற்கும் நிலைமைதான் உள்ளது.

ஆனால் இந்த யதார்தமான உண்மையை மேலேயுள்ள எந்தவொரு அரசியல்வாதியும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இருப்பினும் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணிலே பகிரங்கப்படுத்திய விடயத்தினை இங்கு வெளிப்படுத்துவது முக்கியமானதாகின் றது.

மன்னார் மடுமாதாவின் புனித பூமிக்கு வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க, சாள்ஸ் எம்.பி.யின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் கொழும்பு கடுகதி நகரசேர் புகையிரத சேவையையும், செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கைக்கு அமைவாக வவுனியா சீனித்தொழிற்சாலையையும் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த விடயங்களில் மக்கள் நலன்கள் எவ்வளவு தூரம் இருக்கின்றது இல்லை என்பதெல்லாம் விவாதமல்ல.

ஆனால் இந்த இரு உறுப்பினர்களும் தனித்தனியாக ரணிலுடன் தொடர்பில் இருந்துள்ளார்கள், கோரிக்கைளை முன்வைத்துள்ளார்கள் என்பது நிதர்சனமாகின்றது.

இவ்வாறான நிலைமையில் இருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளை மையப்படுத்தி, ஆக்கிமிப்புக்களை தடுப்பதற்கான செயற்றிட்டமொன்றை உருவாக்குவது என்பது கல்லில் நாருரிப் பதற்கு நிகரான தாகும்.

இது தான் தமிழினத்தின் இன்றைய கையறு நிலை. ■

# மாகாண அதிகாரப் பரவலாக்கம்
# சர்வதேசத்தை ஏமாற்றும் தந்திரமா?



தீபச்செல்வன்

இலங்கையில் தற்போது 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பேச்சுக்கள் அதிகம் இடம்பெற்று வருகின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகிறேன் என்றும் அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கினால்தான் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் பேசி வருகின்றார். சர்வதேச ரீதியாக இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை பேசுபொருளாக ஆகியுள்ள நிலையில், பொருளதார நெருக்கடியால் இலங்கை இன்னமும் மீள முடியாதுள்ள நிலையில் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுகள் எழுந்துள்ளன. உண்மையில் இவை உளசுத்தியுடன்தான் நடக்கின்றதா என்பதை ஆராய வேண்டும்.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் சுதந்திரத்திற்குப் பிந்தைய சூழலில் மிகப் பெரும் இன ஒடுக்குமுறைகளை சந்தித்து வருகின்றனர். தனிச் சிங்களச் சட்டம், கல்வி உரிமை மறுப்பு, வேலை வாய்ப்பில் புறக்கணிப்பு என்ற பாரபட்சங்களுடன் நிலம் மீதான ஆக்கிரமிப்பும் இனம் மீதான ஒடுக்குமுறையும் ஈழத் தமிழ் மக்களை தனிநாடு கோரிய போராட்டத்தை கையில் எடுக்க நிர்பந்தித்தது. சிங்களப் பேரினவாதிகள் ஈழத் தமிழ் மக்கள் வாழ்ந்த தாயக நிலங்களை சுருட்டிக் கொள்வதில் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் இருந்தே திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தமிழர்களின்தாயகத்தை அழிக்க வேண்டும், ஆக்கிரமிக்க வேண்டும் என்ற கொடிய மனநிலை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அத்துடன் 1958இல் பாரிய இனப்படுகொலை இடம்பெற்றது. 56இல் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தமையினால், 58இல் தமிழ் தலைவர்கள் அமைதிவழிப் போராட்டத்தை மேற்கொண்ட நிலையில் சிங்களப் பேரினவாதிகளும் அரச தரப்பினரும் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதை தீர்வாகக் கொண்டு நிறைவேற்றினர். அதன் பின்னர் 77களிலும் 83களிலும் மிகப் பெரிய இனப்படுகொலைகள் நடைபெற்றன. 83 ஜூலை இனப்படுகொலையில் சுமார் மூவாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழரின் பெருமளவான பொருளாதார வளம் அழிக்கப்பட்டமை வரலாற்றில் மறையாத வடுவாகும்.

ஈழத் தமிழ் மக்கள்மீது இத்தகைய இன ஒடுக்குமுறைகளை சிங்கள தேசம் மேற்கொண்ட வேளையில் ஈழத் தமிழ் மக்களின் தனிநாடு கோரிய விடுதலைப் போராட்டம் பெரு வீச்சு கண்டது. அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் ஈழத் தமிழ் மக்களின் தாயகக் கனவை இன்னமும் கூர்மைப்படுத்தியது.

பிரித்தானியாவினால் சிங்கள தேசத்திடம் பறிபோன தாயக உரிமையை மீட்டெடுக்க தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து களமாடினர். ஈழத் தமிழ் மக்கள் தமது அடையாளத்தையும் உரிமையையும் மீட்டெடுக்கும் போராட்டத்தால் உலக அளவில் கவனத்திற்கு உரியவர்கள் ஆயினர்.

தலைவர் பிரபாகரன் அவர்களின் தீர்க்க தரிசனம் மிக்க சிந்தனையும் விடுதலைப் போராட்ட வழிமுறையும் தியாகங்களும் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை தனித்துவமாக்கியது. சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்குமுறை மற்றும் அடக்குமுறைகளுக்கும் உரிமை மறுப்புக்கும் தனித் தமிழீழமே தீர்வு என்பதை தலைவர் பிரபாகரன் உறுதியுடன் நம்பிச் செயலாற்றினார். சொல்லுக்கு முதல் செயல் என்ற சிந்தனையை வரித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீர்க்கம் மிகு செயற்பாடுகளால் ஈழத் தமிழரின் தாயகம் எடுத்துரைக்கப்பட்டது.



இந்த நிலையில் தான் 1987களில் ஒரு முக்கிய நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் நடந்த இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தம் என்ற அரசியலமைப்பு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் வாயிலாக இலங்கையின் மாகாணங்கள் நிர்வாக அலகாக உருவாக்கப்பட்டதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு தமிழர் தாயகம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனாலும் இலங்கையின் இனப் பிரச்சினையின் தீவிரத்திற்கு 13ஆவது திருத்தம் ஒருபோதும் தீர்வல்ல என்று விடுதலைப் புலிகள் கருதினர்.

இதனால் 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபை தீர்வையும் தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு முற்றாக நிராகரித்தது. அன்றைக்கு விடுதலைப் புலிகள் 13ஐ நிராகரித்தமை எவ்வளவு நியாயமானது என்பது கடந்த 36 வருடங்களாக நாம் பார்த்து வருகின்றோம். முதல் மாகாண சபையான வடக்கு கிழக்கு மாகாண சபையின் குறுகிய காலச் செயற்பாடுகளும் தோல்வி நிலைகளுமே அன்றைக்கு தமிழீழமே தீர்வு என்பதை அழுத்திச் சொல்லின. இதனால் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து தமிழீழத்தை அடையும் போராட்டத்தில் முழு அளவில் ஈடுபட்டு வந்தனர்.

13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு இன்றைக்கு 36 ஆண்டுகள் ஆகின்றன. இன்னமும் காவல்துறை அதிகாரம், காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் இழுபறி நிலை காணப்படுகின்றது. 36 வருடங்களாக 13ஐ நடைமுறைப்படுத்த எடுக்கும் முயற்சிகள் இன்னமும் நிறைவேறவில்லை என்பதே 13ஆவது திருத்தத்தின் தோல்வியை எடுத்துரைக்கின்றது. 13ஐ ஒரு மாய மான் என்று உலகத் தமிழர் பேரியகத்தின் தலைவர் பழநெடுமாறன் கூறுவார். உண்மையும் அதுதான். இந்த மாய மானை வைத்துக் கொண்டு மீண்டும் அரசியல் செய்து தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற இன்றைய அதிபர் ரணில் தீர்மானித்துள்ளார்.

அண்மையில் தமிழ் கட்சிகளுடன் ரணில் நடாத்திய கூட்டத்தில் அவரது பேச்சும் தொனியும் மிக அதிகாரமாக காணப்பட்டது.

தமிழ் தலைவர்களை அவமதிக்கும் நோக்கிலும், மிதிக்கும் தொனியிலும் ரணில் பேசினார். அதுவே இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் நிலையையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. ஈழத் தமிழ் மக்கள் சமத்துவமாக வாழ வேண்டும், கௌரவமாக வாழ வேண்டும், சுய மரியாதையுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே போராடி வருகிறார்கள். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்த ரணிலின் அணுகுமுறை இன்றில்லை.

ஏனெனில் அன்று எமக்கு ஆயுதப் போராட்டம் சமத்துவத்தையும் கௌரவத்தையும் சுயமரியாதையையும் பெற்றுத் தந்தது. விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போகிறேன் என்று ஈழத் தமிழ் இனம்மீது இனப்படுகொலைப் போரை நடத்தினார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. ஈழத் தமிழ் மக்களை அழித்து விடுதலைப் புலிகளை சிதைத்துவிட்டு எந்த தீர்வையும் வழங்காமல் தமிழர் தாயகத்தை அழிப்பதே சிங்களத்தின் திட்டம் என்று அன்று தலைவர் பிரபாகரன் எச்சரித்தமைதான் இப்போது நடக்கின்றது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால், அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் ரணில் கூறுகிறார். எந்த நன்மைகளையும் தீர்வுகளையும் கொண்டிராத, ஈழத் தமிழ் மக்களை பாதுகாக்க வலுவற்ற 13ஆவது திருத்தத்தைக்கூட நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று சிங்களப் பேரினவாதிகள் குதிக்கச் துவங்கியுள்ளனர்.

அவர்களை ரணில் அடக்குவதைப் போலத் தெரியவில்லை. நெருக்கடி நிலைகளில் இருந்து தப்பிக்கொள்ள 13ஆவது திருத்தம் பற்றிப் பேசிக் கொண்டு அதற்கு எதிராக குதிப்பவர்களையும் ரணில் காப்பாற்றுகிறாரா என்பதே இன்றைய கேள்வி. அப்படி எனில் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றவே இந்தத் தந்திரமா? ■

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 38 ஆகஸ்ட் 2023 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# அரைவேக்காட்டு 13க்குள் முடக்கும் தீவிர முயற்சி

நீண்டகாலமாக, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினை கோரிநிற்கின்ற தமிழ்த் தேசிய இனம் 1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தாம் சரித்திரபூர்வமாக வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு, சமஷ்டி கட்டமைப்புடன் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கே தொடர்ச்சியாக ஆணை வழங்கி வருகின்றார்கள்.

குறிப்பாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பின்னர் ‘தமிழீழம்’ தான் தீர்வு என்ற நிலைப்பாட்டையும் தமிழ் மக்கள் கூட்டாக எடுத்திருந்த நிலையில் முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின்னர் ஐக்கிய இலங்கைக்குள் உள்ள சுயநிர்ணம் உறுதிப்படுத்தப்பட்டு சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 13ஆவது திருத்தச்சட்டத்தினை அரசியல் தீர்வாகவோ அல்லது தீர்வின் ஆரம்பபுள்ளியாகவோ கருதவில்லை. ஆனால் இலங்கையின் அதியுச்சமாக மத்தியில் குவிக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஏற்பாட்டை சொற்ப அளவில் வெளிப்படுத்தி நிற்கின்ற முன்னுதாரண திருத்தமாக மட்டுமே கொள்ளப் படுகின்றது.

இவ்வாறான நிலையில், 1987ஆம் ஆண்டு பாராளுமன்ற பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தினை கடந்த காலங்களில் பதவிகளில் இருந்த ஏழு ஜனாதிபதிகள் அமுலாக்கவில்லை. 13ஆவது திருத்தம், அரசியலமைப்பில் தனி இணைப்பு அல்ல. அதனடிப்படையில், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியபிரமாணம் செய்துள்ளனர்.

அவ்வாறு அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப் படுத்தாதது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். எனவே அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துவது அவசியமாகும்.

அதுமட்டுமன்றி, இந்திய, இலங்கை உடன்பாட்டுக்கு அமைவாக குறித்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் சர்வதேச ஒப்பந்தத்தையும், அயலுறவுகளையும் மத்தித்து குறித்த விடயத்தினை நடைமுறைச்சாத்தியமாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகின்றது.

அதேநேரம், பொருளாதார நெருக்கடியின்போது, இந்தியாவே கைகொடுத்து உதவியதன் காரணமாகவே, பட்டகடமைக்கு, ஆட்சியில் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் நன்றிக் கடன் செலுத்த வேண்டிய கடப்பாட்டிலும் உள்ளார்கள்.

அதற்காக, தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை 13ஆவது திருத்தச்சட்டத்திற்குள் முடக்கிவிட்டு எதிர்காலத்தினைப் பலிகொடுக்க முடியாது. நடைமுறைச்சாத்தியமான விடயங்களையே உரையாட வேண்டுமென்ற பொதுவாதம் தொடர்ச்சியாக கிளப்ப பட்டுக்கொண்டிருக்கின்றது. 13ஐ நடைமுறைப் படுத்தாதவர்கள் சமஷ்டியைத் தருவார்களா என்றும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், ஒற்றையாட்சிக்குள் 13ஐ ஏற்றுக்கொள்வது முதலாவதாக அடிப்படைக் கோட்பாட்டுக்கே எதிரானது. அதனை விடவும், 13ஐ ஏற்றுக்கொள்வதாக கூறி பேச்சு மேசைக்குச் சென்றால் அங்கே ஆரம்பமாகப்போகின்ற உரையாடல் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்ததே ஆகும்.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் உணர்வு ரீதியானவை என்று தட்டிக்கழிக்கப்பட்டு, வடக்கு, கிழக்கு நிராகரிக்கப்பட்டு அரைவேக்காட்டு நிலையில் உள்ள 13ஐ தலையில் கட்டுவதற்கே தென்னிலங்கை முனையும். அதனைக்கூட ஏதோ தீவிர எதிர்ப்புக்களுக்கு மத்தியில் முன்னெடுப்பதாக காண்பிக்கும் முயற்சிகளும் அரங்கேறும்.

அகவே, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் அது வெறும் அரைவேக்காட்டு 13இற்குள் முடக்கும் தென்னிலங்கைத் தலைமைகளின் சூட்சும முயற்சிக்குள் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் சிக்கிவிடவே கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

# நமது ஈழநாடு பணிப்பாளரின் படுகொலைக்கு நீதி வேண்டும்



## 17 ஆம் ஆண்டு நினைவேந்தல்

எமது ~நமது ஈழநாடு பத்திரிகையின் பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகாராஜா இனந் தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டதன் 17 ஆம் ஆண்டு (ஆகஸட் 20) நினைவேந்தல் மாதம் இது.

நமது ஈழநாடு அஞ்சலிகளை தெரிவிப்பதுடன்; அவரது கொலைக்கான நீதியையும் கோரி நிற்கின்றது.

யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு தமிழ் தேசியத்தை வலியுறுத்தி கடந்த 2002 ஆம் ஆண்டு சி.சிவமகாராஜா நமது ஈழநாடு பத்திரிகையை ஆரம்பித்துவைத்ததுடன் அதன் பணிப்பாளராகவும் செயலாற்றிவந்தார்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி வெளிவந்த இப்பத்திரிகையினால் சவாலை எதிர்கொண்ட இலங்கை அரசும் இராணுவம் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று நாவலர் வீதியில் அமைந்திருந்த நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தை அத்துமீறி சோதனை நடத்தியதுடன் உடமைகளை தீ வைத்தும் கொழுத்தினர். தொடர்ந்து நமது ஈழநாட்டின் ஊடகவியலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் எதிராக அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பணிப்பாளர் சிவமகாராஜா தெல்லிப்பளையிலுள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். அவரது வீடு அப்போது இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளேயே அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பணிப்பாளர் சிவமகராஜாவின் பாடுகொலையை கண்டித்து ஐ.நா. வின் யுனெஸ்கோ மற்றும் பன்னாட்டு ஊடகவியலா ளர் அமைப்பு ஆகியன அறிக்கைகள் வெளியிட்டதுடன் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அரசை கோரியிருந்தன.

இதேவேளை நமது ஈழநாட்டின் பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமகராஜா படுகொலை செய்யப்பட்டு அடுத்த ஆண்டே (2007) நமது ஈழநாட்டின் ஊடகவியலாளர்களான செல்வராஜா ரஜிவர்மன் ஏப்ரல் மாதமும் சகாதேவன் நிலக்சன் ஆகஸ்ட் மாதமும் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# ஜனாதிபதி தேர்தலுக்கான ரணிலின் காய்நகர்த்தல்

**தந்திரீகன்**

‘அரகல’ மக்கள் போராட்டத்திற்கு பின்னர் 21 ஜுலை 2022இல் நாடாளுமன்றத்தின் ஊடான தெரிவில் ஜனாதிபதி பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, அதன்பின்னரான காலப்பகுதியில் தன்னை உள்நட்டிலும், சர்வதேசத்திலும் அங்கீகாரமளிக்கப்பட்ட ஜனாதிபதியாக நிலைநிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதற்காக அவர் பயன்படுத்திய உத்திகளில் ஒன்று பாராளுமன்ற தமிழ் பிரதிநிதிகளுடன் முன்னெடுக்கப்பட்ட தனித்தனியான, குழுவான பேச்சுவார்த்தையாகும். இதில் அவர் காணி, பொலிஸ் அதிகாரங்களற்ற, வடக்கு, கிழக்கு இணைப்பற்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவது குறித்து கரிசணைப்பட்டார்.

எனினும், அந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக பௌத்த பீடங்களின் பகிரங்க கடிதமும், நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் கூடிக்கலைந்த பௌத்த தேரர்களின் வலியுறுத்தல்களுக்கும் பின்னர் சற்றே பதுங்கிக் கொண்டார்.

இந்த நிலையில் பதவியேற்று சுமர் ஒரு வருடத்தின் பின்னர் ஜுலை 21ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோக பூர்வமான விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தரைவழி,வான்வழி, கடல்வழி போக்குவரத்துக்கான இந்தியாவின் கோரிக்கைக்கு தலைசாய்தார்.

இந்தியாவின் நீண்டகால இலக்கான ‘திருகோணமலை’யை தாரைவார்ப்பதற்கும் தலையசாய்த்தார். அதுமட்டுமன்றி, தமிழர்களின் தாயகத்தில் இயற்கை அனர்த்தத்தின் விளிம்பில் உள்ள மன்னார் மாவட்ட வளங்களை உறிஞ்சிச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள அதானி போன்ற பெருநிறுவன முதலாளிகளையும் தனியே சந்தித்து அவர்களின் கோரிக்கைகளுக்கும் பச்சை சமிக்ஞை அளித்தார்.

இதன்மூலமாக, விஜயத்தின் பிரதான விடயமான பிரதமர் மோடியுடனான கூட்டு அறிவிப்பு நிகழ்வின்போது, இந்திய இலங்கை ஒப்பந்தம், தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு, 13ஆவது திருத்தம் போன்றவற்றுக்கான முக்கியத்துவங்களை மலினப்படுத்தி வெற்றி கண்டார்.

எனினும், தொடர்ந்து நாடு திரும்பியவர், உடனடியாக இந்தியாவின் அறிவுறுத்தல்களுக்குச் செயற்படுவது போன்று இரண்டாவது சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அதில் 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமான உரையாடலை தீவிரமாக கிளப்பி விட்டார். அத்தோடு நிறுத்தாது, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளிடம், 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் கருத்துக்களை தமக்கு அளிக்குமாறு ஆகஸ்ட் 15வரையில் காலக்கெடு விதித்தார்.

இதற்குள் கடந்த, ஆகஸ்ட் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக விசேட உரையொன்றை ஆற்றினார். இந்த உரையின் உள்ளீடுகள் வெளிப்படைத் தோற்றத்துக்கு “ஏதாவது செய்வதற்கு அர்ப்பணிப்புடன் முயற்சிக்கும் ஒரு தலைவர்” என்ற விம்பத்தை வெளிப்படுத்துகின்றன.

அதற்கு அவ்வுரையில் அவர் குறிப்பிட்ட, “13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன. நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்”



“பிராந்தியத்தில், இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. சீனாவிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள்,கோரளைகள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியுள்ளனர்”

“இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் அலகாகவோ மாகாண சபைகளை ஏற்காத மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிக்க ஹெல உறுமயவும் கூட மாகாண சபை முறைமையில் திருத்தப்பட வேண்டிய விடயங்களும் திருத்தப்படக்கூடாத விடயங்களும் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளன.

ஆகவே மாகாண சபையானது இலங்கையின் ஆட்சி முறையில் இருந்தும் அரசியலில் இருந்தும் அகற்ற முடியாத ஒரு நிலையான காரணியாக மாறியுள்ளது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது”

“அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும், நாட்டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கிச் செல்லும் வகையில் பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மாகாண சபை முறைமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டன. மாகாண சபைகளை சரியான பாதையில் வழிநடத்துவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுகிறது. மறுபுறம், இது மிகவும் திறமையான மற்றும் அதிக சேவை வழங்கும் நிறுவன கட்டமைப்பாக உறுதிப்படுத்த முடியும்” உள்ளிட்ட கூற்றுக்கள் அடிப்படையாக அமைகின்றன.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்களை ஆழமாக அவதானிக்கின்ற போது சில விடயங்களை ஊகித்துக்கொள்வதற்கு முடிகின்றது. அதுமன்றி அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளையும், சிறுபான்மையினர் விரும்பியோ விரும்பாமலோ வாக்களிக்கும் நிலைமைகளையும் தோற்றுவிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கின்றார் என்பது வெளிப்படையாகின்றது.

அதில் முதலாவது விடயம், 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பிகர்வு சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனைகளுக்கு அமைய பிரதமர் தலைமையிலான குழு கலந்துரையாடல்களை ஆரம்பித்து அடுத்தகட்டம் நோக்கி செல்லவுள்ளதாக கூறுகின்றார். அதற்காக காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லை. அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக இருக்கையில் இந்தக் கலந்துரையாடல்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைக் கூற முடியாது. அவ்வாறு நீடித்தாலும் அது தேர்தலை மையப்படுத்தியதாகவே உள்ளது.

இரண்டாவதாக, ஏற்கனவே, ஆறிலந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு அரசியலமைப்பு திருத்தத்திற்கு மீண்டும் நாடாளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்துக் கட்சிகளின் அங்கீகாரத்துடன் தான் அடுத்தகட்டம் நோக்கிச் செல்ல முடியும் என்று குறிப்பிடுவது நிச்சயமாக காலத்த இழுத்தடிக்கும் செயற்பாடாகும். ஏனெனில் அவரிடத்தில் நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத நிலையில் நாடாளுமன்றத்தில் அவரின் முன்மொழிவுகள் நிறைவேற்றப்படுதல் காணல்நீரைப் போன்றதாகும்.

மூன்றாவதாக, நாடாளுமன்றமானது சட்டவாக்கத்தை பணியாகக் கொண்டது. நிறைவேற்று அதிகாரம் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டது. ஆகவே ஏனைய விடயங்களில் அவ்விதமான தீர்மானத்தினை எடுக்கும் ஜனாதிபதி ரணில், 13, அதிகாரப்பகிர்வு விடயங்களில் மட்டும் நாடாளுமன்றை முன்னிலைப்படுத்துவதும், தன்னை அதிலிருந்து விடுவித்திக்கொள்வதும் குறித்த விவகாரங்களில் அவர் எவ்வளவு அர்ப்பணிப்புடன் உள்ளார் என்பதை மிகத் தெளிவான வெளிப்படுத்துகின்றது.

நான்காவதாக, 13, அதிகாரப்பகிர்வு சார்பில் மலைய பிரதிநிதிகளுடன் தனியாகவும், முஸ்லிம் பிரதிநிதிகளுடன் தனியாகவும், வடக்கு,கிழக்கில் சிறுபான்மையினராக உள்ள சிங்கள மக்கள் மீது திடீர் கரிசனை கொண்டுள்ள விமல், உதய போன்ற அணியினருடன் தனியாகவும் கலந்துரையாடல்களைச் செய்வதற்கு முனைப்புக்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் ஒன்றுக்கொன்று எதிரான நிலைப்பாடுடையவர்களை ஒருபுள்ளியில் சந்திக்க வைப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதை அறியாதவர் அல்ல. ஆக, சந்திப்புக்கள், சுற்றுப்பேச்சுக்கள் என்ற அடுத்து வரும் காலம் நகரப்போகின்றது.

ஐந்தாவதாக, 13, அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக உரையாடலை ஆரம்பித்துள்ள ஜனாதிபதி ரணிலுக்கு தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலை விடவும் வேறெந்த தேர்தலும் குறித்தும் ஒவ்வாமையையே கொண்டிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அப்பால் ஆளுரைமையப்படுத்தி ‘ஆலோசனை சபை’ என்ற கட்டமைப்பை உருவாக்குவதற்கு முனைகின்றார்.

அவ்வாறான நிலையில் அதிகாரங்களைப் பகிரப்பட்டாலும், மாகாணங்களுக்கான தேர்தல் நடத்தப்படாது அதனை அனுபவிப்பது யார் என்ற கேள்விகள் இருக்கின்றன.

ஆறாவதாக, ஜனாதிபதி ரணில், 13, அதிகாரப்பகிர்வு ஆகிய விடயங்கள் பற்றிய கருத்துக்களை வெளியிட்டதும், பொதுஜனபெரமுன உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதான மற்றும் துணை தரப்புக்கள், சில எதிர்த்தரப்புக்கள் ‘கோட்டாபயவுக்கு வழங்கிய மக்கள் ஆணையில் பதவியில் உள்ளவருக்கு குறித்த விடயங்களை கையாள்வதற்கான மக்கள் ஆணை இல்லை’ என்று தடாலடியாக அறிவித்துள்ளன. ஆகவே அவை நிச்சயமாக ஒத்துழைப்புக்களை வழங்கப்போவதில்லை. முரண்டு பிடிக்கப்போகின்றன. இந்த நிலையில் ஜனாதிபதி ரணிலால் என்ன செய்ய முடியும்?

ஏழாவதாக, இத்தனை காலமும் உறை நிலையில் இருந்த படையினருக்கான அமைப்புக்கள், தேசிய சிங்கள, பௌத்த அமைப்புக்கள், தேரரர்கள் சங்கங்கள், ராஜபக்ஷ ஆதரவு சக்திகள், ஒருசில ராஜபக்ஷகள், சிங்கள, தேசிய வாக்குவங்கி அரசியல் கட்சிகள் என்று பலமுனையில் ஜனாதிபதியின் 13,அதிகாரப்பகிர்வு விடயங்களுக்கு எதிராக போர்க்கொடிகளை தூக்கியவாறு வெளிக்கிளம்பியுள்ளன. இந்த நிலைமை ரணிலின் அடுத்த ஜனாதிபதிக் கனவில் நிச்சியமாக மண்ணை போடுவதற்கும் வாய்ப்புக்கள் இருப்பதால் அவர் அடக்கி வாசிக்கும் நிலைமைகளும் ஏற்படும்.

எட்டாவதாக, தமிழ்க் கட்சிகள் ஆளுக்குகொரு கருத்துக்களை கொண்டிருக்கின்றன. குறிப்பாக 13 வேண்டவே வேண்டாம் என்ற நிலைப்பாடு, 13ஐ முதலில் முழுமையாக அமுலாக்குங்கள் என்ற நிலைப்பாடு, 13 முதற்கட்டமாக அமுலாக்குங்கள் எஞ்சியதை பின்னர் பார்க்கலாம் என்ற நிலைப்பாடு, சமஷ்டி தான் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. இது ஜனாதிபதி ரணிலுக்கு சாதகமான நிலைமையைத் தான் ஏற்படுத்தப்போகின்றது. குறிப்பாக, தமிழ் கட்சிகளுக்குள் ஒருமித்த கருத்துக்கள் காணப்படாமையால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்திற்கு காண்பித்து அதிகாரப்பகிர்வு விடயத்தினை ஒட்டுமொத்தமாக கைகழுவுதற்கான சூழலையும் ஏற்படுத்தும்.

ஒன்பதாவதாக, நான் ஒற்றையாட்சிக்குள் காணி, பொலிஸ் அதிகாரமற்ற 13ஐ வழங்கவே முனைந்தேன் ஆனால் நாட்டைப் பிரிக்கும் சமஷ்டி கேட்டார்கள் அதனை வழங்கவே மாட்டேன் என்று தென்னிலங்கையில் தனது அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்துக்கும் வழிகோலுவதற்கும் குறித்த விடயங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு உதவுவதாக இருக்கப்போகின்றது.

இதற்குள் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று பகிரங்கமாக கூறியுள்ள சஜித்தும் வசமாக சிக்கிக் கொண்ட நிலைமையே ஏற்படும். (அவர் அவ்வாறு கூறாது விட்டாலும் சிக்கும் நிலைமை தான்)

பத்தாவதாக, தென்னிலங்கை 13ஐ தீவிரமாக எதிர்க்கின்றது, வட,கிழக்கு அதனை ஏற்பதற்கு தயாரில்லை ஆகவே பொருளாதார நெருக்கடிகளுக்குள் வெள்ளை யானைகளாக இருக்கும் மாகாண சபை முறைமைகளை முற்றாக துடைத்தெறிந்துவிடுவோம் என்றொரு அரசியல் பிரசாரத்தினையோ அல்லது செயல்ரீதியான நடவடிக்கையோ முன்னெடுக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவை அனைத்துமே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தன்னைப்புறக்கணித்த வடக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களாலும் அங்கீகாரமளிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியாக மீண்டும் அரியாசனத்தில் அமர்வதற்கான ரணிலின் காய்நகர்த்தல் என்பது பற்றி ஆழமான புரிதல் அவசியமாகின்றது. ■

# ‘13’ ஆவது திருத்தம்

## தொழில்நுட்ப ரீதியாக தாண்ட வேண்டியுள்ள பல்வேறு தடைகள்

தேசிகன்

• இலங்கையில் ஒருமையையும் இறைமையையும் ஆள்புல ஒருமைப் பாட்டையும் பேணுதல்,

• எல்லாப் பிரஜைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழவும் வளம்பெறவும் தமது அபிலாஷைகளை நிறைவேற்றவும் கூடிய ஒரு பல்லின, பல மொழி பேசும் பன்மைச் சமுதாயச் சட்டமொன்றினுள் ஒவ்வொரு இனக் குழுவினதும் தனிவேறான கலாசார மற்றும் மொழி சார்ந்த அடையாளத்தைப் பேணிவளர்த்தல்,

• வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நாட்டின் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுக் குடியிருப்புப் பிரதேசங்களாக அங்கீகரித்தல்

ஆகிய குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கூட்டிணைக் கட்டப்படவிருந்ததும் ஓரளவுக்கு இந்தியத் தோற்ற அளவிலான அரைகுறை சமஷ்டித் திட்டத்தின் மாதிரியில் அமைந்ததுமான நிறுவனரீதியான சட்டமொன்றை 1987ஆம் ஆண்டு ஜூலை 29 இல் கைச்சாத்தான இந்திய இலங்கை ஒப்பந்தம் முன்மொழிந்திருந்தது.

அதனடிப்படையில் 1978இன் அரசியலமைப்புக்கு 1987இல் ஆக்கப்பட்ட 13ஆவது திருத்தம் இலங்கையில் மாகாண சபைகள் முறைமையொன்றின் ஊடாக ஒற்றையாட்சிக்குள் அரசியல் அதிகாரத்தின் பகிர்வுக்கான சட்டத்தை வகுத்துரைத்தது.

அது தொடக்கத்தில் இத்தீவின் வடக்கிலும், கிழக்கிலும் அரசியல் அதிகாரத்துக்கான தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு பதிற்செயலாக வடிவமைக்கப்பட்ட போதிலும் பல்வகைப்பட்ட அரசியற் சூழ்நிலைகளின் நிமித்தம் அக்குறிக்கோளை நிறைவேற்றுவதில் அது வெற்றி பெறவில்லை. எனினும் மாகாண சபை முறைமை நாட்டின் எஞ்சிய பகுதியில் கடந்த தசாப்தங்களாகச் செயற்பட்டு வந்துள்ளது.

அத்துடன் 13ஆவது திருத்தம் சிறிலங்காவில் சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான அரசியல் மற்றும் அரசியலமைப்புச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய யதார்த்தமான அல்லது அடைந்து கொள்ளக் கூடிய அதிகாரப்பகிர்வுச் சட்டமொன்றைக் குறிக்கின்றதா என்பதில் கடுமையான சந்தேகங்கள் தொடர்ந்துமுள்ளது.

அந்த வகையில் தற்போது தென்னிலங்கையில் உணர்வு ரீதியாக பார்க்கப்படுகின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்த 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமான உரையாடல் மீண்டும் அரசியல் அரங்கில் ஆரம்பமாகியிருக்கின்றது. அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கான பிரதான தடைகளில் ஒன்று வலிதாக்கப்பட்ட ஓர் ஒற்றையாட்சி அரசொன்றை கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் 13ஆவது திருத்தம் தொழிற்படுகின்றதென்பது, இதனொரு அம்சமாகும்.

அத்துடன், தேசியப் பாராளுமன்றம் அதன் சட்டவாக்க அதிகாரத்தை துறத்தலோ, எந்தவிதத்திலும் பராதீனப்படுத்துதலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டவாக்க அதிகாரம் கொண்ட ஏதேனும் அதிகாரசபையான மாகாண சபைகளுக்கு ஏற்பாடு செய்கின்ற 154எ உறுப்புரையுடன் ஒத்திருப்பதாகத் தோன்றவில்லை.

இப்புறக் கட்டுப்பாடுகளினுள் தொழிற்படுவதனாலும், 13ஆவது திருத்தம் அரசியலமைப்புடன் ஒத்திருப்பதாகப் பொருள் கொள்ளும் வகையில் 13ஆவது திருத்தம் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பெரும்பான்மையினர் எடுத்த அதிகாரப்பகிர்வு பற்றிய குறுகிய நோக்கினாலும் மாகாண சபைகளினால் அதிகாரங்களின் பிரயோகம், முரண்பாடான ஒரு சந்தர்ப்பத்தில் மத்திய அரசாங்கத்துக்கு மட்டும் சாதகமாகத்தீர்க்கப் படக்கூடிய, ஓர் அரசியலமைப்பு ஐயப்பாட்டுடன் தொடங்குகின்றது நிறைவேற்று அதிகாரத்தை (அத்துடன் பகிர்ந்தளிப்பு வாய்ப்புக்களுக்கான ஆதரவை) மையப்படுத்துகின்ற 1978 அரசியலமைப்பின் கீழ் மிதமிஞ்சிய வல்லமையுள்ள ஜனாதிபதிப்பதவி ஒத்திசைவான அதிகாரப் பகிர்வு முறைமைக்குப் பகையானதென்ற நிலைப்பாடே தற்போதும் நீடிக்கின்றது.

அதிகாரப்பகிர்வுக்கும் மாகாண சுயாட்சிக்கும் ஒரு முக்கிய இடர்பாடாக ஒருங்கியை நிரல் காணப்பட்டது. ஒருங்கியை நிரலில் கூறப்பட்ட விடயங்கள் மீதான சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாணங்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்படுதலை உறுதிப்படுத்த முனைகின்ற அரசியலமைப்பு ஏற்பாடுகள் எப்படியிருந்தாலும், அரசியலமைப்பின் வேறு ஏற்பாடுகளும் (எடுத்துக்காட்டாக உறுப்புரை 76 மற்றும் மேலும் குறிப்பாக மாகாணச் சட்டங்களுக்கு மேல் தேசியச் சட்டங்களுக்கு முந்து தலைமை வழங்குகின்ற உறுப்புரை 154எ) அதேபோன்று ஒருங்கியை அதிகாரங்களின் பிரயோகம் தொடர்பில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மத்திய அரசாங்கத்தின் நடைமுறையும், மாகாண சபைகள் அவ்வதிகாரங்களை அர்த்தமுள்ளமுறையில் அனுபவிக்க இயலாதவையெனக் காட்டியுள்ளன.



ஒருங்கியை நிரலின் துர்ப்பிரயோகத்துக்கான உதாரணங்கள் மத்தியில் கல்வி என்ற விடயம் முனைப்பாயுள்ளது. மாகாண நிரலின் இனம் 3 ‘கல்வியும் கல்விச்சேவைகளும்’, ஒரு மாகாண விடயமெனத்தாபிக்கின்றது. ஒருங்கியை நிரலின் இனங்கள் 2 மற்றும் 3 ‘கல்வியும் கல்விச் சேவைகளும்’ஓர் ஒருங்கியை விடயமெனவும் ஏற்பாடு செய்கின்றன.

எனினும் மாகாண நிரலால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மட்டும்தான் ‘கல்வி’ ஒருங்கியை விடயமென இவ்வேற்பாடுகள் தெரிவிக்கின்ற அதேவேளையில், ‘கல்வி’யை விரித்துக்கூறுகின்ற அந்நிரலின்படி ‘குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத எல்லா அரச பாடசாலைகளுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்தல்’ ஒரு மாகாண விடயமாக இருக்குமெனத் தெரிவிக்கின்றது.

‘குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள்’ (ஏனையவற்றுடன்) அரசாங்கத்தின் கட்டுப்பாடு தேவைப்படுகின்ற ‘தேசிய பாடசாலை’ எதுவென்பது பற்றிய 20 வருட அனுபங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய வரைவிலக்கணம் அங்கில்லை. எனினும் இதன் விளைவாக மத்திய அரசாங்கம், மாகாண சபைகளைக் கலந்தாலோசிக்காமலும் அறிவித்தலின்றியும் புறநிலையான எவ்வித நியாயப் படுத்தலின்றியும் மாகாண சபைகளின் நோக்கெல்லையிலிருந்து அரச பாடசாலைகளைச் சுவீகரிப்பதற்குப் பெரும்பாலும் இவ்வேற்பாடுகளைப் பயன்படுத்தியுள்ளது.

மாகாண அதிகாரங்கள் ஒத்தவகையில் பறித்துக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வைத்தியசாலைகள், கமநலச் சேவைகள், நீர் வளங்கள், சுரங்கவேலை மற்றும் கனிப்பொருள்கள் தொடர்பானவை.

அதேபோன்று நிகழ்காலத்தில் நவநெகும, கமநெகும, நகெனஹிர நவோதய, தசதஹசக்வெவ், இறுதியாக திவிநெகும நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அரசியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தச் செயல் திட்டங்கள் ஒரு தொடர்வரிசையான மாகாண நியாயாதிக்கங்கள் மீது பல்வேறு தாக்கங்களைச் செய்வதோடு மட்டுமல்லாது, அதிகாரங்களையும் இலாவகமாக மீளப்பெற்றுள்ளன.

இதுபோலவே, 154ஞ உறுப்புரையினால் மாகாண மேல் நீதிமன்றங்களைத் தாபிப்பதன் ஊடாகக் குறித்தசில நீதித்துறை அதிகாரங்கள் பகிரப்படுகின்ற போதிலும் அதன் பின்னர், குறித்துரைக்கப்பட்ட நிதிப் பெறுமதிக்குக் கூடிய வழக்குகள் மீது நியாயாதிக்கம் கொண்டதாகக் கொழும்பில் தாபிக்கப்பட்ட வர்த்தக மேல் நீதிமன்றமும் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கிடையில் வழக்குகளை இடம்மாற்றுவதற்குப் பிரதம நீதியரசருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரமும் அதிகாரப்பகிர்வுக் கோட்பாட்டை மீறுகின்றன.

ஒருங்கியை நிரலின் கட்டமைப்புக்குறைபாட்டுடன் நெருக்கமான தொடர்புடையதுதான் ‘எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசியக் கொள்கை’ என்ற தலைப்பில் ஒதுக்கிய நிரலிலுள்ள இனம். அது மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட விடயங்களின் மீது கூட வரையறையற்ற சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு அளிக்கின்றதனால் அதிகாரப்பகிர்வுக் கோட்பாட்டுக்கு முற்றிலும் ஒவ்வாததாயுள்ளது.

எடுத்துக்காட்டாக மத்திய பாராளுமன்றம் 1991 இன் 4ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரப்பகிர்வுக்குக் குந்தகமான முறையில் இவ்வேற்பாட்டின் உதவியை நாடியது. அவ்வாறே 1991 இன் 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தை ஆக்குவதற்கும். அச்சட்டம் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட நிலவழிப் போக்குவரத்து மீதான அதிகாரங்களுக்குத் தெளிவாக முரணானதாயிருந்தது.

இவ்விரு குறித்த அம்சங்களுக்கு மேலதிகமாக 13ஆவது திருத்தத்தின் கீழான விடயங்களினதும் அதிகாரங்களினதும் பிரிவு பற்றிய பொதுவான அரசியலமைப்புத் தெளிவின்மையும் சுட்டிக்காட்டுகின்றது. இதன் விளைவாக பொறுப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் வளங்கள் மீதான முரண்பாடுகள். சேவைகள் திரும்பச் செய்யப்படுதல், தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாண உறுப்பினர்களுக்கிடையில் அரசியல் பிணக்கு (குறிப்பாகத் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபைகளைத் தமது செயற்களத்தினுள் அத்து மீறுவனவாக நோக்குதல்) மற்றும் மாகாணச் சட்டங்களுக்கும் கொள்கை உருவாக்கலுக்கும் மதிப்பளிக்காத மத்திய மனப்பான்மை என்பவை ஏற்பட்டன.

அதிகாரங்களை மையப்படுத்தலை ஆதரிக்கின்ற அரசியல் கலாசாரத்தின் பின்னணியில் இப்பிணக்குகள் பொதுவாக மத்திய நிறுவனங்களுக்கும் தேசிய மட்ட அரசியல்வாதிகளுக்கும் சார்பாகத் தீர்க்கப்பட்டன. இதன் விளைவுகளாக மாகாண சபைகள், தமது அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலிருந்து தடுக்கப்படுகின்றன, மாகாண அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் மனவுறுதியும் முன்முயற்சியும் ஊறுபடுகின்றது. அத்துடன் அதன் மூலம் மாகாண சுயாட்சி கீழறுக்கப்படுகின்றது.

அரசியலமைப்பு முக்கியத்துவமுள்ள மற்றொரு பிரச்சினை உள்ளூராட்சிப் படிவரிசை தொடர்பானது. தேசிய, மாகாண மற்றும் உள்ளூர்ப் படிவரிசைகளுக்கு இடையில் அதிகாரங்களின் பகிர்வு நன்கு வரையறுக்கப்படவில்லையெனவும் தெளிவற்றதெனவும் நிருவாகத்திலும் நிதியிலும் அரசியலிலும் நேரடி மத்திய உள்ளூர் தொடர்புகள் மாகாண மட்டச் சுயாட்சிக்குத் தீங்கிழைக்கக் கூடியனவெனவும் கருதப்பட்டது.

மாகாண சபைகளின் உதவியை நாடாமலேயே மத்திய அரசாங்கம் நேரடியாக உள்ளூர் மட்டத்தில் செயற்படுகின்ற (உண்மையில் ஜனாதிபதி அதிகாரத்தின் ஒரு நீடிப்பான) பிரதேச செயலாளர்கள் முறைமையால் இந்நிலைமை மேலும் சிக்கலாக்கப் படுகின்றது.

1992 இன் 58ஆம் இலக்க அதிகாரங்களின் கைமாற்றம், பிரதேசச செயலாளர்கள் சட்டத்தின் மூலம் இவ்வதிகாரிகள் மாகாண அதிகாரிகளின் கட்டுப்பாடோ மேற்பார்வையோ இல்லாது மாகாண ஆட்ச்சிப்பிரதேசத்தினுள் நிருவாகக் கடமைகளை நிறை வேற்றுகின்றனர்.

இறுதியாக, அரசியலமைப்பின் உரை மூலத்தில் வழமையை விடக்கூடிய கவனஞ்செலுத்தப்படுமென மெய்யாகக் கருதப்படக்கூடிய, அரசியலமைப்பின் திருத்தத்துக்கான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் அதிகாரப்பகிர்வைப் பாதுகாப்பதில் பெரும் அக்கறை காட்டுகின்றதென்பது சந்தேகத்துக்கிடமானதே.

எடுத்தக்காட்டாக, பதினேழாவது திருத்தத்தின் மூலம் சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழுவை நிறுவுதலானது, உறுப்புரை 154எ(3) இல் விதிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவும் மாகாண சபைகளின் கருத்துக்கள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவும் வேண்டிய ஒரு சந்தர்ப்பமென வாதிடப்படலாம்.

ஏனெனில் இது மாகாண நிரலில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பொலிஸ் அதிகாரங்களைப் பாதிக்கின்ற ஒரு விடயமாகும். பதினேழாவது திருத்தத்தின் விடயத்தில் இது செய்யப்படவில்லை.

பொலிஸ் மற்றும் சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, அரசிறை வருமானக் கொள்கை என்பவற்றின் மீதான அதிகாரங்கள் உட்பட, அரசியலமைப்பின் உரை மூலத்தில் மாகாணங்களுக்கும் பகிரப்பட்ட எல்லா அதிகாரங்களும் நடைமுறையிலும் பகிரப்பட்டனவாக இருக்கவில்லை.

ஆகவே, மாகாணசபை முறைமையை நடை முறைப்படுத்தல் என்பது, காணி, பொலிஸ் அதிகாரங்களுக்கு அப்பால் பகிரப்பட்ட அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு விடயங் களில் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

ஆனால் அதற்கான சூழல் தற்போது உள்ளதா என்பது தான் பிரதான கேள்வியாகின்றது. ■

# அடக்குமுறையும் ஆக்கிரமிப்பும் இன்னும் அகலவில்லை

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கவலை




முல்லைத்தீவு குருந்தூர் மலையில் மாத்திரமின்றி, ஈழத் முழுவதும் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் இன்னமும் அகலவில்லை என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், அப்படி அகன்றால் போன்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்த அரசியல் நரியான ரணில் முயற்சி மேற்கொள்ளுகின்றார் என்று குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பில் தமிழ் தேசிய ஆய்வு அமையம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:


**குருந்தூர் மலையில் பொங்கல்**

"முல்லைத்தீவில் அமைந்துள்ள குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு பெருமெடுப்பில் கடந்த 18.08.2023 அன்று இடம்பெற்றது. இதில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இருந்து பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டுள்ளனர். தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்கவும் தமிழ் மக்களின் மரபுரிமையை பாதுகாக்கவும் தன்னெழுச்சியாக மக்கள் திரண்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு சென்ற மக்கள் ஆதிசிவன் ஐயனாரை நினைந்து வழிபாட்டில் ஈடுபட்டதுடன் பொங்கல் பொங்கி தமது வழிபாட்டு உரிமையை காக்கும் செயற்பாடுகளிலும் பங்கெடுத்தனர். இதன் போது தேவாரங்கள் இசைக்கப்பட்டு, சைவ முறைப்படி பூசைகள் இடம்பெற்றன. மிக நீண்ட தூரத்தில் இருந்து வந்த பக்தர்கள், இளைப்பாடி குருந்தூர் மலையில் வழிபாடுகளை மேற்கொண்டமை சிறப்பம்சமாகும்.

**காலால் மிதித்த கொடுமை**

இதேவேளை கடந்த சில நாட்களின் முன்னர், குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாடு மேற்




கொள்ளச் சென்ற வேளையில், தமிழ் மக்களுக்கு சிங்களப் பேரினவாதிகளும் சிங்கள பௌத்த பிக்குகளும் பெருமட் இடையூறுகளை ஏற்படுத்தி இருந்தனர். அங்கு வழிபாடு மேற்கொள்ளச் சென்ற மக்களை கடுமையான வார்த்தைகளில் ஏசி, அவர்களை அவமதிப்பு செய்ததுடன், வழிபாடுகளை மேற்கொள்ள முடியாதளவுக்கு ஸ்ரீலங்கா காவல்துறையைக் கொண்டு பெரும் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, அந்தத் தருணத்தில் பொங்கலுக்காக மூட்டப்பட்ட அடுப்பினை கால்களால் மிதித்து அணைத்த கொடும் நிகழ்வும் அரங்கேற்றப்பட்டது. ஸ்ரீலங்கா காவல்துறை அதிகாரிகளும் சிங்கள அபௌத்த பேரினவாதிகளும்

சைவ மரபில் இலக்குமியாக கருதி வணங்கப்படும் அடுப்பை மிதித்தமை உலக தமிழ் மக்களிடம் பெரும் சினத்தையும் கவலையையும் ஏற்படுத்தியது.

**தற்போதும் தடை?**

இந்த நிலையில், தமிழ் மக்கள் குருந்தூர் மலையில் வழிபாடுகளை மேற்கொள்ளவும் பொங்கல் செய்யவும் நீதிமன்றம் அனுமதி அளித்திருந்ததுடன், அங்கு தமிழ் மக்களின் வழிபாடுகளுக்கு இடையூறு விதிக்கக்கூடாது என்று சிங்களப் பேரிவாதிகளுக்கு நீதிமன்றம் எச்சரித்தது.

அத்துடன் தாம் எந்த இடையூறுகளையும் செய்ய மாட்டோம் என்று சிங்கள பௌத்த பிக்குகள் நீதிமன்றத்தில் உறுதி அளித்திருந்தனர்.

இதேவேளை தமிழ் மக்கள் பொங்கலில் பங்கு பற்றக் கூடாது என்பதை தடுப்பதற்கான பல ஏற்பாடுகளை சிங்களப் பேரினவாதிகளும் அரச தரப்பும் மேற்கொண்டதாகவும் அங்கிருந்து தகவல்கள் வெளியாகி இருந்தன. குறிப்பாக சில போலி முகநூல்களில் பொங்கல் நிகழ்வுக்கு நீதிமன்றம் தடை என்றும் கலந்துகொண்டால் சிறையில் இருக்க நேரிடும் என்றும் எச்சரிக்கும் விதமான பதிவுகள் பணம் கொடுத்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் 18.08.2023அன்று பொங்கல் இடம் பெற்ற சமயத்தில் அங்கு வருகை தந்த சில பிக்குகள் இடையூறுகளை ஏற்படுத்த முனைந்துள்ளனர். இதனால் அங்கு குழப்பங்கள் ஏற்படும் சூழல் நிலவிய போதும் தமிழ் இளைஞர்களின் எதிர்ப்பினை கண்டு குறித்த பிக்குகள் வெளியேறியுள்ளனர். இம்முறையும் கால்களால் அடுப்பை தட்டி அணைக்க அந்த பிக்குகள் முனைந்தமை தடுக்கப்பட்டுள்ளது.

**குருந்தூர்மலை யாருடையது?**

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய ஈழ நிலத்தை சிவ பூமி என்று திருமூலர் என்கிற பழமையான தமிழ்நாட்டுச் சித்தர் அழைத்துள்ளார். சிவத்தலங்கள் நிறைந்த ஈழத் திருநாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலை ஈழ மக்களின் பண்பாடு மற்றும் வரலாற்று தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். ஆதிஅனாதி காலத்தில் இருந்து இங்கே ஆதிசிவன் ஆலயம் இருந்து வந்துள்ளது. ஈழ மன்னர்களில் ஒருவரான பண்டார வன்னியன் இவ் ஆலயப் பகுதியில் அரணை அமைத்து ஆட்சி புரிந்து வாழ்ந்துள்ளார்.

கடந்த சில வருடங்களின் முன்னர் குருந்தூர் மலையில் எண்முக லிங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த எண்முக லிங்கத்தை ஒத்த சிவலிங்கங்கள் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இதேவேளை அங்கு கண்டுபிடிக்கப்பட்டவை சிவ லிங்கம் என்றும், அங்கு பன்னெடுங்காலமாக சைவ ஆலயங்கள் இருந்தன என்றும் அவை ஈழத் தமிழ் மக்களின் தொன்மைக்கு சான்றாதாரங்கள் என்றும் வரலாற்றுப் பேராசிரியரும் யாழ் பல்லைக்கழக வேந்தருமான சி. பத்மநாதன் தெரிவித்தமை பெரும் ஆதாரமாகும்.

**அகன்றதா ஆக்கிரமிப்பு?**

குருந்தூர் மலையில் பொங்கல் இடம்பெற்ற போதும் அங்கு ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட சட்டவிரோத விகாரை இன்னமும் அகற்றப்படாத நிலையில், அந்த விகாரையில் குறித்த தினத்தில் சிங்களவர்கள் தென்னிலங்கையில் இருந்து பெருமளவில் வருவிக்கப்பட்டு, வழிபாடுகள் இடம்பெற்றமை தமிழ் மக்களுக்கு விடுத்த மறைமுடுக எச்சரிக்கையாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் குறித்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு தென்னிலங்கையில் இருந்து மக்களை கொண்டுவருவிக்கப்பட்டமையும் அச்சுறுத்தலின் பாற்பட்டதாகும்.

இதேவேளை குறித்த இடத்தில் விகாரை அமைக்க நீதிமன்றம் தடை விதித்திருந்தது. அத்துடன் விகாரை அமைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்ற போதும் கூட நீதிமன்றம் தடை விதித்தது. என்ற போதும்நீதிமன்ற உத்தரவை மீறி, ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் காவல்துறையின் பாதுகாப்புடன் சிங்கள பௌத்த பேரினவாதிகள் குறித்த விகாரையை அமைத்து முடித்தமை சட்டவிரோதமாகும்.

**ரணிலின் நரி விளையாட்டு**

இதேவேளை தற்போது குருந்தூர் மலையில் சிவன் ஆலயத்தை அமைக்க இந்து பௌத்த மத தலைவர்கள் மத்தியில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பிரதேசத்தில் ஆக்கிரமிப்பு விகாரையை அமைத்த பின்னர், அங்கே சிவன் ஆலயத்தை அமைக்க அனுமதி தருகிறோம் என்பது ஆக்கிரமிப்பினதும் அடக்குமுறையினதும் மொத்த வடிவமாகும் என்பதை நினைவில் கொள்வோம்.

தமிழ் மக்களின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அடக்குமுறை செய்து கொண்டு தமிழ் மக்களே பிச்சை போடுவது போன்ற தோற்றப்பட்டை காட்டும் இன்றைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் தமிழ் மக்களின் எதிர்ப்பை திசைமாற்றவும் இத்தகைய நரி விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றார் என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையம் சுட்டிக்காட்டும் அதேவேளை, இத்தகைய அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகப் போராடி தமிழர் தாயகத்தை மீட்க அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என்றும் வலியுறுத்தி நிற்கிறது..." என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வேர்களை மீட்டு உரிமை வென்றிட

# மன்னார் - மாத்தளை நடைபயணம்

## 16 நாட்கள் -248 கிலோமீற்றர்

இன, மத பேதங்களைக் கடந்த ஆதரவு, அரச சார்பற்ற அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், செயற்பாட்டாளர்கள், குறிப்பாக மதகுருமார்களின் ஒத்துழைப்பு, ஆயிரக்காணவர்களின் பங்கேற்பு மற்றும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இறுதி நிகழ்வுடன் முடிவுக்கு வந்திருக்கிறது, மலையகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான மிக நீண்ட நடைபயணமான, தலைமன்னார் முதல் மாத்தளை வரையான "வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட" மாண்புமிகு மலையக எழுச்சி பேரணி நடைபயணம்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர், தென்னிந்தியாவின் பல பிரதேசங்களில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்களை பயிரிடுவதற்காக கூலிகளாக அழைத்துவரப்பட்ட தமிழர்கள் இலங்கையின் வடக்கே தலைமன்னாரில் இருந்து மத்திய மலைநாட்டின் மாத்தளைக்கு வந்தடைந்த வலி சுமந்த மிக நீண்ட பயணத்தை (கால்நடை) நினைவுகூரும் வகையில் 248 கிலோமீற்றர்களைக் கொண்ட நடைபயணம் ஜூன் 28ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 12ஆம் திகதி நிறைவடைந்தது.

1820களின் பிற்பகுதி குறிப்பாக 1823ஆம் ஆண்டு முதல் கப்பல் மூலம் தலைமன்னாரில் வந்திறங்கிய தமிழக மக்கள், கால்நடையாக ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு மாத்தளையை வந்தடைந்தனர். பல வருடங்களாக ஆயிரக்கணக்கானோர் இவ்வாறு தமிழகத்தில் இருந்து மலையகப் பெருந்தோட்டங்களில் பணியாற்றவென அழைத்துவரப்பட்டனர். பயணத்தின் நடுவே அந்த மக்கள் கடுமையான நோய்களை எதிர்கொண்டனர், காடுகளை வெட்டி, பாதையமைத்து, காட்டு விலங்குகளின் தாக்குதல்களை எதிர்கொண்டே அவர்கள் மாத்தளையை அடைந்தனர். வந்தடைந்த மக்கள் கூட்டத்தில் 40 சதவீதமானோர் வழியில் இறந்தமையால், ஆங்காங்கே புதைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

தலைமன்னார் முதல் மாத்தளை வரையான இந்த நடைபயணம் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதம் சார்ந்த நிகழ்வு என விமர்சனங்களை எதிர்கொண்டது. எனினும் பயணம் ஆரம்பித்த நாள் முதல் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரும் வழங்கிய ஆதரவு மற்றும் நடைபயணம் முன்னெடுக்கப்பட்ட விதத்தில் இதுவொரு சமூகத்தின் விடியலுக்காய் முன்னெடுக்கப்பட்ட போராட்டமே என்ற வலுவான செய்தியை வெளிப்படுத்தியது.

தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையான இந்த நடைபயணத்தில் மலையகத்தின் பல பாகங்களிலும் இருந்து பல அமைப்புகள் தமது உறுப்பினர்களையும் சமூக ஆர்வலர்களையும் அனுப்பி பங்கேற்கச் செய்தன. தமது முன்னோர்களின் பயணத்தை நினைவுகூறும் வகையில் சமூக செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் குறிப்பாக கிறிஸ்தவ அருட்தந்தையர்கள் இணைந்து ஊர்வலத்தை ஆரம்பித்தனர். மலையகத் தமிழர்களின் வேர்களைக் கண்டறிந்து அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதே இந்த பயணத்தின் நோக்கமாகும். பயணத்தின் இடைநடுவே, உள்ளூர் சமூகங்களை சந்தித்து, அவர்களின் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். மலையகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தங்களின் அடையாளத்தை அரசு அங்கீகரித்து சம உரிமை வழங்கக் கோரி அவர்கள் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.



இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது மலையகத் தமிழச் சமூகம் நாட்டின் இரண்டாவது பெரிய இனமாக இருந்தபோதிலும், அரசியலமைப்பின் பிரிவு 29 (2) இல் காணப்படும் சிறுபான்மையினர் காப்பீடுகளை மீறி இந்த மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பலர் வலுக்கட்டாயமாக தமிழகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

சிரிமாசாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறிமாஇந்திரா ஒப்பந்தம் (1974) உள்ளிட்ட இந்தியாவுடனான இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் பல்லாயிரக்கணக்கன தமிழர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர் மேலும் பலர் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். "இது இந்த சமூகத்தின் உறுப்பினர்களிடையே பெரும் வேதனையை ஏற்படுத்தியது, அவர்களில் பலர் தங்கள் உறவினர்களிடமிருந்து பிரிந்தனர். குடியுரிமை இல்லாத பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு முறையான குடியுரிமை வழங்குவதற்கும் பல தசாப்தகாலப் போராட்டம் தேவைப்பட்டது. ஆனால் பல அரசியல், நிர்வாக மற்றும் சமூகப் பொருளாதாரப் பகுதிகளின் முன்னேற்றம் மெதுவாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகிறது," என இந்த நடைபயண ஏற்பாடுகளின் முன்னோடிகளில் ஒன்றான "மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவு" அமைப்பு அறிவித்திருந்தது.

ஆதரவும், முக்கிய நிகழ்வுகளும்

தலைமன்னார் புனித லோரன்ஸ் தேவாலயத்தில் நடைபயணம் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக தமிழ மக்கள் கூலிகளாக இலங்கையில் கால்பதித்து 200 ஆண்டுகள் நிறைவை நினைவுகூரும் முகமாக நினைவுத்தூபி தலைமன்னாரில் நிறுவப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது மலையக மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையில் நடமாடும் நடமாடும் கண்காட்சியும் காட்சிப்படுத்தப்பட்டது. (ஒவ்வொரு நாளும் பயணம் நிறைவில் இந்த கண்காட்சி அந்ததந்த இடங்களில் இடம்பெற்றது) பேசாலை வெற்றி மாதா தேவாலயத்திலிருந்து ஆரம்பித்த 'மலையக எழுச்சிப் பயணம்' மன்னார் நகரசபையை வந்தடைந்தபோது சிவில் சமூகத்தினர், மதத்தலைவர்கள் மலையக மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பதாகைகளை ஏந்தி அவர்களை வரவேற்றனர்.

"வேர்களை மீட்டு உரிமை வென்றிட" மன்னாரிலிருந்து மாத்தளை வரையான நடைபயணத்தில் சுயாட்சிக்காக தொடர்ந்து போராடி வரும் போரால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்கள், புதுக்குடியிருப்பில் இந்த நடைபயணத்திற்கு ஆதரவு தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். அதேபோல் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இந்த நடைபயணத்திற்கு ஆதரவு தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதோடு, பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு புதுகுடியிருப்பு சந்தியிலிருந்து கைவேலி வரையில் நடைப் பயணமாக முன்னெடுக்கப்பட்ட ஆதரவு பேரணி அங்கிருந்து வாகன ஊர்வலமாக

09 ஆம் பக்கம் பார்க்க

8 ஆம் பக்கத் தொடர்ச்சி



கிளிநொச்சியை அங்கு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பேரணிக்கு மத குருமார், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அர சார்பற்ற நிறுவன ஊழியர்கள், இளைஞர்கள், வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட பொது மக்களும் தமது ஆதரவை வெளிப்படுத்தி பேரணியில் பங்கேற்றனர்.

மதவாச்சி பிரதேச செயலகம் நடைபயணத்திற்கு சிங்கள பௌத்த மக்களின் கலாச்சார நடனத்துடன் வரவேற்றதோடு, அங்கு பல்வேறு நிகழ்வுகளையும் நடத்தியிருந்தது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து இந்த நடைபயணத்திற்கு ஆதரவு தெரிவித்து கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா வரையில் பேரணி மற்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.



முருங்கன், வவுனியா நகர சபை மைதானம், திரப்பனை பிரதேச செயலகம், கெக்கிராவை, நாலந்தாரமய விகாரை ஆகியவற்றில் நடைபயணத்திற்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதோடு, பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தனர்.

**சர்வதேச ஆதரவு**

மலையக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்படும் நடைபயணத்தை முழுமையாக ஆதரிப்பதாகவும், மலையக தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டும் எனவும், அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் பற்றிய விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகடா தெரிவித்திருந்தார். தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான மலையக எழுச்சிப் பயணத்தில் பங்கேற்கும் மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களுடன் ஒன்றிணைவதாக நான்கு சர்வதேச அமைப்புகள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன. சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான ஆசிய மன்றம் (FORUMASIA) குடிமக்கள் பங்கேற்பிற்கான உலகக் கூட்டமைப்பு ( CIVICUS: World Alliance for Citizen Participation) மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாக்கும் அமைப்பான ப்ரொண்ட்லைன் டிபெண்டர்ஸ் (FrontLine Defenders) ஆகிய அமைப்புகளே கூட்டறிக்கையை வெளியிட்டிருந்தன.

“இலங்கையில் மலையக சமூகத்தின் சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி பயணத்தை மேற்கொண்ட தொழிலாளர்களையும் அவர்களின் போராட்டத்தையும் நினைவு கூறுவதே இந்த நடைப்பயணத்தின் நோக்கமாகும். அத்துடன், இந்த சமூகத்தின் பங்களிப்புகள், சாதனைகள் மற்றும் அவர்கள் எதிர்கொண்ட சவாலான மற்றும் பல தலைமுறைகளாக அனுபவிக்கும் கட்டமைப்பு வன்முறைகள் ஆகியவற்றினை வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மலையக சமூகம் இலங்கையில் மிகவும் நலிவடைந்த, வரலாற்று ரீதியாக குடியுரிமை மற்றும் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு கட்டாய நாடுகடத்தல் மற்றும் நாடற்ற நிலை ஆகியவற்றினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். மலையக சமூகத்தினருக்கு காணி, குடியிருப்பு, வாழ்வாதாரம், நியாயமான ஊதியம், கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அரச சேவைகளில் சம உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகிறது.

அங்கீகாரம் மற்றும் சமத்துவத்திற்கான சமூகப் போராட்டம் தொடர்வதுடன், காலனித்துவம் மற்றும் அடிமைத்தனத்தில் வேரூன்றிய பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படல் ஆகியன மலையக மக்களின் வாழ்க்கையினை தற்போதும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவும்.” என அந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.




**மாத்தளை பிரகடனம்**

தமது வருகையின் 200 ஆவது வருடப்பூர்த்தியை நினைவுகூரும் மலையகத் தமிழ் சமூகத்தினர், முழுமையான மற்றும் சமமான பிரஜைகளாக, இலங்கை வாழ்வில் முழுமையாக, அர்த்தமுள்ளதாக பங்கேற்பதற்கும் வகையில் மாத்தளை பிரகடனம் வெளியிடப்பட்டது.

1.எமது வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பினை ஏற்று அவற்றை அங்கீகரித்தல்.

2.ஏனைய பிரதான சமூகங்களுக்கு இணையான ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொண்ட, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஒரு பகுதி மக்களாக அங்கீகாரம்.

3.தேசிய சராசரிகளுடன் சமநிலையை எட்டுவதற்காக விசேடமாக இச் சமூகத்தை இலக்கு வைத்து விசேட செயற்பாடுகளை செயற்படுத்தி கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை.

4.வாழ்விற்கான ஓர் ஊதியம், கண்ணியமான வேலை, சட்டப்பாதுகாப்பு, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம்.

5.தொழிலாளர்களிலிருந்து சிறு நில உடமையாளர்களாக மாறும் பொருட்டு வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கான பாதுகாப்பான உரிமைக்காலத்துடனான காணி உரிமை

6.மலையகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிக்கு சம பயன்பாடு மற்றும் சம அந்தஸ்து.

7.அரசாங்க சேவைககளையும், சமூக நலத்திட்டங்களையும் சமமான அணுகல்.

8.பெருந்தோட்டங்களிலுள்ள மனிதக் குடியேற்றங்களை புதிய கிராமங்களாக நிர்ணயம் செய்தல்.

9.வீட்டுப் பணியாளர்களின் முழுமையான பாதுகாப்பு.

10.மலையகக் கலாசாரத்தை பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்.

11.அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் ஆளுகையில் ஓர் அர்த்தமுள்ள வகிபங்கை வழங்கும் ஒப்புரவான மற்றும் உள்ளடங்கலான தேர்தல் முறைமை மற்றும் அதிகாரப் பகிர்வு.

சமுதாயத்தின் அரசியல் அந்தஸ்து மற்றும் சமூகபொருளாதார நல்வாழ்வு ஆகியவை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதாக நம்புவதாக குறிப்பிட்டுள்ள மாண்புமிகு மலையக கூட்டிணைவு, நீடித்த காலப் பகுதியில் நாடற்ற நிலை, வாக்குரிமை பறிப்பு மற்றும் அதனைத்தொடர்ந்து சனத்தொகையில் சரிவு நிலை ஆகியவை இன்றுவரை பல்வேறு தாக்கங்களைக் கொண்டுள்ளதுடன் இதன் அடிப்படையிலேயே 11 அம்சக் கோரிக்கைகளின் வரையறைகளையும் வடிவமைத்துள்ளதாககுறிப்பிட்டுள்ளது. மேலும் கட்டவிழ்க்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட வன்முறைச் சுழற்சிகள், அதன் விளைவாக ஏற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளுக்கான இடப்பெயர்வுகள், பாரபட்சமான மற்றும் நியாயமற்ற நடத்துகை மற்றும் இந்தச் சமுதாயம் தொடர்ச்சியாக ஓரங்கட்டப்பட்டமை ஆகியவை தமது முறையீட்டிற்கு மிக அவசர தேவையை சேர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

**இறுதி நாள் நிகழ்வு**

ஜுலை 12ஆம் திகதி காலை 4.30 அளவில் நாலந்தாராமய விகாரையில் ஆரம்பமான நடைபயணம் நண்பகல் 12 மணியளவில் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்ற மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. பயண வழியில் எட்டு இடங்களில் விசேட வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. குறிப்பாக மாத்தளை இந்துக் கல்லூரியில் பயணத்திற்கு தமிழர் பாரம்பரியத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டதோடு, ஒரு மணித்தியாலம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதி நிகழ்வுகள் பி.ப 2 மணியளவில் ஆரம்பமாகியிருந்தன. அதிதிகள் உரை, கலை, கலாசார நிகழ்வுகளுடன் மாண்புமிகு மலையகம் எழுச்சிப் பயணத்தில் முழுமையாக பங்கேற்றவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். 11 அம்சங்கள் அடங்கிய மாத்தளை பிரகடனமும் வெளியிடப்பட்டது. மேலும் நடைபயணத்தை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னமொன்றும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நிறுவப்பட்டது. ■



# நிலவின் தென் துருவத்தில் இந்தியா சாதனை

இந்தியாவின் 'சந்திரயான்3' விண்கலத்தின் விக்ரம் லேண்டர் சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது வரலாற்று சாதனை படைத்துள்ளது.

நிலவின் தென் துருவத்தில் இது வரை யாரும் ஆய்வு செய்யாத இடத்தில் தடம் பதிக்க இந்தியா முயற்சி மேற்கொண்டு அதில் வரலாற்று சாதனை வெற்றியையும் நிலைநாட்டியுள்ளது.

இதன் மூலம், அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை தொடர்ந்து, நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4வது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. ஆனால் தென் துருவத்தில் கொடியை நாட்டிய பெருமை இந்தியாவை மட்டுமே சேரும்

கடந்த மாதம் 14 ஆம் திகதி சந்திரயான்3 விண்கலம் அனுப்பப்பட்டது. பூமிக்கும் நிலவுக்கும் இடையே யுள்ள 3 லட்சத்து 84 ஆயிரம் கி.மீ. தொலைவை 40 நாட்கள் பயணித்து கடக்கும் திட்டத்துடன் புறப்பட்ட சந்திரயான்3 முதலில் புவி வட்டப் பாதையில் பல்வேறு நிலைகளில் சுற்றிவந்து பின்னர் நிலவு நோக்கி பயணித்து அதன் வட்டப்பாதைக்கு மாற்றப்பட்டது.

நிலவு வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டிருந்த சந்திரயான்3 விண்கலத்தில் உள்ள உந்து கலனில் இருந்து லேண்டர் கருவி வெளியே கொண்டுவரப்பட்டு அதே வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டே நிலவை நெருங்கி சென்றது. இந்நிலையில் தற்போது விக்ரம் லேண்டர் சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

நிலவின் தென் துருவத்தில் நிகழப் போகும் அதிசயங்கள் என்ன ?

சந்திரயான்3 வெற்றிகரமாகத் தரையிறங்கிவிட்டது. அதன் வயிற்றுக்குள் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டு சென்ற 'இஸ்ரோவின் குழந்தையான' ரோவர் வெளியே வந்துவிட்டது.

தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய விக்ரம் லேண்டரில் இருந்து ரோவர் வெளியேறி பணிகளைத் தொடங்கி உள்ளது.

முதல் கட்டமாக, நிலவில் தனது ஆறு சக்கரங்களையும் பதித்த ரோவர், அதன் அடுத்தகட்டப் பணிகளைத் தொடங்கிவிட்டது என்று இஸ்ரோ அறிவித்தது. ரோவர் முதலில் உலா வரும். பிறகு தனது ஆய்வுகளை மேற்கொள்ளும். இந்த ஆய்வின் மூலம் தென் துருவத்தில் புதைந்திருக்கும் பல அதிசயங்களை இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு அது வழங்க இருக்கிறது.

நிலவுக்குச் செல்ல மேற்கொண்ட மூன்றாவது பயணம்தான் சந்திரயான் 3 திட்டம். நிலவின் மேற்பரப்பிலுள்ள அதிர்வுகள் குறித்த ஆய்வுக்காக சந்திரயான் 1 மற்றும் சந்திரயான் 2இன் விக்ரம் தரையிறங்கி கலன் பிரக்யா ஊர்தி கலன் ஆகியவையும் அதே தென் துருவத்தில் தரையிறங்க அனுப்பப்பட்டன.

தற்போது சந்திரயான் 3 அதே பகுதியில்தான் தரையிறங்கியுள்ளது.

இருப்பினும் சந்திரயான் 1 நிலவின் தென் துருவத்தில் மோதி தரையிறங்கியது. சந்திரயான் 2 மெதுவாக தரையிறங்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

ஆனால் இப்போது சந்திரயான் 3 மூலம் நிலவின் தென் துருவத்தில் மெதுவாகத் தரையிறங்கிய முதல் நாடு என்ற புகழை இந்தியா அடைந்துள்ளது.

இந்தியாவை போலவே ஆகஸ்ட் 11ஆம் தேதி ரஷ்யாவால் ஏவப்பட்ட லூனா 25 விண்கலமும் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்குவதற்காகப் பயணித்துக் கொண்டிருந்தது. ஆனால் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது நிலவில் மோதி நொறுங்கியது. இந்த முயற்சியில் இஸ்ரோவுக்கு வெற்றி கிடைத்துள்ளது. இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் மிக முக்கியமான மைல் கல்லாகப் பார்க்கப்படுகிறது.

வரலாற்றில் இதற்கு முன் சாதித்தவர்களின் பெயர்கள் நினைவுகூரப்படுகின்றன. நிலவில் தனது ஆய்வுக் கருவியை முதன்முதலில் அனுப்பியது ரஷ்யா என்றாலும் நிலவில் முதலில் காலடி வைத்தது அமெரிக்காதான்.

அனைத்து நாடுகளும் விண்வெளி ஆய்வில் தாங்கள் முன்னோக்கி இருப் பதை நிரூபிக்க முயல்கின்றன. அதனால் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற முத்திரையைப் பதிக்க இஸ்ரோ முயன்றது. அதை சாதித்தும் காட்டியுள்ளது. ■



# உக்கிரமடையும் ஆதிக்கப்போட்டி

## 'இந்தியா, சீனா இடையே சிக்கித்தவிக்கும் சிறிலங்கா'

**பூலோகன்**



ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று, தரை, வான், கடல் வழி இணைப்புக்களுக்கான ஒப்பந்தற்களையும், திருகோணமலையை மையப்படுத்திய பொருளாதார வலய முதலீடுகளுக்கும் 'தரளமான' இணக்கப்பாடுகளைச் செய்து கொண்டு நாடு திரும்பியிருந்தார்.

அவர் நாடு திரும்பி ஒருமாத காலத்திற்குள், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சீனா அழைத்திருக்கின்றது. அதுவும், சார்க் கட்டமைப்புக்கு பதிலடியாக ஆரம்பித்துள்ள தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்கில் ஏழாவது சீனதெற்காசிய எக்ஸ்போ நிகழ்வில் கலந்துகொள்ளும் போர்வையில் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

ஏலவே யுனான் ஆளுநர் சிறிலங்காவுக்கு வருகை தந்து வெளிவளங்கள் திணைக்களத்துடன் உடன்பாட்டை எட்டியுள்ளதோடு, கிழக்கு மாகாண பல்கலைக்கழகம் வரையில் அகலக் கால் பதித்துவிட்டுச் சென்றிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் தான், யுனானுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைக்கப்பட்டுள்ளார். அவ்வாறு அழைக்கப்பட்ட தினேஷ் குணவர்த்தனவை சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியுறவு ஆணைக்குழு அலுவலகத்தின் பணிப்பாளரும் சீனாவின் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ சந்தித்து உரையாடினார்.

அதன்போது, நிதிக் கடன் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு சீனா உதவுமெனவும், இலங்கையின் இறையாண்மை சுதந்திரம் மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளதாகவும், வறுமைப் பொறி மற்றும் வளர்ச்சியற்ற பொறி ஆகியவற்றை அகற்றவும் உதவும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற இரு தரப்புக்கும் இடையிலான முன்னோக்கிய முதன்மையான ஒத்துழைப்பு திட்டங்கள் இலங்கை மக்களுக்கு நன்மைகளை கொண்டு வருவதுடன் பிராந்திய இணைப்பு மற்றும் நிலையான அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கும் என்றும் குறிப்பிட்டதோடு ஆபத்தான தருணத்தில் சீனாவின் கைகொடுப்பை மறந்துவிடமுடியாது என்று கூறி நன்றிகளையும் தெரிவித்திருக்கின்றார்.

இருநாடுகளின் தலைவர்கள் அல்லது முக்கிய பிரதிநிதிகள் சந்திக்கின்றபோது இவ்விதமான இராஜதந்திர மொழிகளைக் கொண்ட உரையாடல்கள் வழமையானதாக இருந்தாலும், சீனாவினுடைய கூற்றுக்கள் மிகவும் ஆழமானவை.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது போன்று சீனா, இறையான்மை சுதந்திரமான செயற்பாடு உள்ளிட்ட சொற்பதங்களை பொதுப்படையான இராஜதந்திர மொழியாக இங்கு கையாளவில்லை என்பது தான் முக்கிய விடயம்.

ஏனென்றால், தற்போது தென்சீனக் கடலில் நங்கூரமிட்டுள்ள சீன கடற்படையின் முக்கியமான ஆய்வுக் கப்பல்களில் ஒன்றான 'ஷி யான்6' எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளது.

அவ்வாறு வருகை தரும் குறித்த சீன ஆய்வுக்கப்பல் சிறிலங்காவின் கடற்பரப்பில் 17 நாட்கள் தரித்து நின்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதோடு அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும், கொழும்புத் துறைமுகத்துக்கும் செல்லவுள்ளது.

இந்தவிடயத்தினை சிறிலங்கா கடற்படை உறுதி செய்துள்ளதோடு, நாரா எனப்படும், தேசிய கடல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகமை நிறுவனமும் தம்முடன் இணைந்து குறித்த கப்பல் ஆய்வுகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன், ருகுணு பல்கலைக்கழகத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக அப்பல்கலைக்கழகத்தின் பிரத்தியேக ஆராய்ச்சிக்காக கடல் நீர் மாதிரிகளைப் பெறுவதற்காகவே குறித்த கப்பல் விஜயம் செய்வதாகவும் பிறிதொரு தகலும் உள்ளது.

வருகைதரும் சீன ஆய்வுக் கப்பலில் ருகுணு பல்கலையின் ஆய்வாளர்கள் இணைந்து பணியாற்றுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அந்த அனுமதி தற்போது வரையில் வழங்கப்படவில்லை என்றும், அப்பல்கலையின் சமுத்திரவியல் மற்றும் கடல் வளங்கள் துறை குறிப்பிடுகின்றது.

முன்னதாக, கடந்த ஜூன் 10ஆம் திகதி தென்னாபிரிக்காவின் கேப்டவுண் துறைமுகத்துக்குச் சந்தம் சந்ததியின்றிச் சென்றிருந்த ர்யுஜ லுயுNபு 24 ர்யுழு என்ற சீனக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் கடந்த 10ஆம் திகதி காலையிலேயே கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசித்தது.

கொழும்பில் சீனாவின் நிதிபங்களில் உருவாக்கப்பட்டுள்ள முனையத்துக்குள் எவ்விதமான ஆரவாரமுமின்றி வருகை தந்த 129 மீற்றர் நீளம் கொண்ட அந்தக் கப்பல், 138 மாலுமிகளுடன் மூன்று நாட்கள் முழுமையாக இளைப்பாறிவிட்டுச் சென்றிருக்கின்றது.

இந்தக்கப்பலின் வருகை சம்பந்தமாக இந்தியா உன்னிப்பாக அவதானிப்பதாக பகிரங்கமாகக் கூறினாலும், எதிர்ப்புக்களை வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த கப்பல் தொடர்பான சந்தேகம் இந்தியாவுக்கு இப்போது அதிகரித்துள்ளது. ஏனென்றால், 'ஷி யான்6' இன் வருகைக்கு முன்னதாகவே அக்கப்பல் வந்து சென்றிருக்கின்றது. ஆகவே வெறுமனே மாலுமிகளுடன் கொழும்புத்துறைமுகத்திற்கு வருகை தந்து தங்கிச் செல்ல வேண்டிய எந்த அவசியமும் இல்லை.

அதுமட்டுமன்றி, குறித்த கப்பலுக்கு எரிபொருள் அல்லது மேலதிக தேவைகள் காணப்படுமாயின் அக்கப்பல் தென்னாபிரிக்காவிலிருந்து அம்பாந்தோட்டைக்கு வருகை தந்து தரித்துச் சென்றிருக்க முடியும். ஆனால் அம்பாந்தோட்டையையும் கடந்து கொழும்புக்கு வந்திருக்கின்றது என்றால் அதில் காரணமில்லாமலில்லை.

மேலும், குறித்த கப்பலின் தொடர்ச்சியாக 'ஷி யான்6' வருகை தரவுள்ளது. இந்த நிலையில் தான் இந்தியா விழித்துக்கொண்டுள்ளது. இதனால் 'ஷி யான்6' இன் வருகை குறித்த விடயம் சம்பந்தமாக நேரடியாகவும், நேர்மறையாகவும் அழுத்தங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இதற்கிடையில். இந்தியா பிறிதொரு நகர்வினையும் முன்னெடுத்திருக்கின்றது. இந்திய அரசாங்கத்தினால் சிறிலங்காவுக்கு டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் வழங்கப்பட்டிருந்தது.

அதன், வருடாந்த பராமரிப்பு சேவைகளுக்காக இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அதற்கு மாற்றீடாக கடல்சார் கண்காணிப்பு டோனியர் விமானமொன்றை சிறிலங்கா விமானப் படைக்கு கையளிக்கும் நிகழ்வை இந்தியா பெருமெடுப்பில் முன்னெடுத்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் இதற்கான நிகழ்வு பெருமெடுப்பில் நடைபெற்றது. ஆனால், இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனோ பங்கேற்றிருக்கவில்லை. ஜனாதிபதியின் பாதுகாப்புத்துறைக்கான சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவே பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.

இவ்வாறான நிலையில், 'ஷி யான்6' இன் வருகை குறித்த விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் எந்த முடிவினை எடுத்தாலும் அது சீனாவை, அல்லது இந்தியாவை நிச்சயமாக உரசிப்பார்ப்பதாகவே இருக்கப்போகின்றது.

முன்னதாக, சீனாவின் செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங் 5 வருகை தருவதற்கு இந்தியாவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சிறிலங்கா அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரிக்கப்பட்டு, பெருமெடுப்பிலான வரவேற்பும் ராஜபக்ஷ அணியினரின் பங்கேற்புடன் நடைபெற்றிருந்தது. அதற்குப் பின்னரான காலத்தில் குறித்த விடயம் சம்பந்தமாக இந்தியா பாரிய அளவில் தனது கரிசனைகளையும், அழுத்தங்களையும் சிறிலங்கா அரசாங்கம் மீது பிரயோகித்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கோட்டபாய ஜனாதிபதியாக இருந்த போதே அனுமதி பெறப்பட்டு நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டு விட்டதாக கூறி இந்தியாவினை சமாளித்திருந்தார்.

எனினும், இந்தியாவின் கடுமையான அழுத்தம் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் எந்தவொரு வெளிநாட்டுப் போர்க்கப்பலும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை.

குறிப்பாக, சீனாவின் பிறிதொரு கப்பலான செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்பு வசதிகளைக் கொண்ட 'யுவான் வாங் 6' அம்பாந்தோட்டைக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரிய போதும், வழங்கப்பட்டிருக்கவில்லை.

அத்தோடு, எந்த நாட்டினதும் ஆய்வுக்கப்பல்கள் சிறிலங்காவின் துறைமுகங்களுக்குள் பிரவேசிப்பது தொடர்பில் எவ்வாறு அனுமதியை அளிப்பது என்பது குறித்து கொள்கையொன்றை உருவாக்குவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அதுபற்றி தற்போது வரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கபடவில்லை. இந்த நிலையில் தான் 'ஷி யான்6' இன் வருகை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் சிறிலங்கா அரசாங்கம் தற்போது, சீனாஇந்தியா ஆகியவற்றின் கிடுக்குப்பிடி பொறிக்குள் சிக்கியுள்ளது. அதுமட்டுமன்றி, சீனாவிற்கு எதிர் முகாமில் உள்ள அமெரிக்கா, அவுஸ்திரேலியா, யப்பான், ஆகிய நாடுகளும் இந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றது.

ஆக, பொருளாதார மீட்சியை எதிர்பார்க்கும் சிறிலங்கா அரசாங்கம் தற்போது சிக்கியிருக்கும் பொறியிலிருந்து எவ்வாறு வெளியில் வரப்போகின்றது என்பது தான் தற்போதுள்ள மில்லியன் டொலர் கேள்வி.











நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க இம்முறை வெள்ளாங்குளம், கரியாலை நாகபடுவான், முக்கொம்பன் பிரதேசங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாவீரர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் சாம்சுடின் முஹமட் மற்றும் முஹட் நிப்ராஸ் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் வழங்கிவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுற்றோர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்த உதவித்திட்ட நிகழ்வில் சுமார் 52 மாணவர்கள் பாடசாலை கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.